**OS.No.98/2021 P.W.1-சீனுவாசன் 24.10.2025**

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

பிரதிவாதி என்னிடம் 27.03.2007-ல் வழக்கு சொத்தை அடமானம் வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த அடமான கடன் முன்னிலைக்கு 27.03.2007-ல் ரூபாய் 2 லட்சம் கடனாக பெற்றுள்ளார் என்றால் சரிதான். 06.02.2008 அன்று கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக சொல்லியுள்ள சமயத்தில் ரூபாய் 2 லட்சம் கடன் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். 06.02.2008ல் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்தால் நான் கொடுத்ததாக சொல்லும் முன்பணம் ரூபாய் 10 லட்சத்தில் பிரதிவாதி கொடுக்க வேண்டிய ரூபாய் 2 லட்சத்தை கழித்திருப்பார் என்றால் அது தனி, இது தனி. கிரய ஒப்பந்தம் முன்னிலைக்கு நான் தான் பிரதிவாதிக்கு பணம் கொடுக்க வேண்டுமென்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் நிலையில் ரூபாய் 2 லட்சம் வட்டிக்கு வாங்க வேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்றால் அது பிரதிவாதிக்கு தான் தெரியும். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் உண்மையில் ஏற்படுத்தப்பட்டிருந்தால் பிரதிவாதி அடமான கடன் முன்னிலைக்கு தான் பெற்றிருந்த கடனை திருப்பி செலுத்தியிருப்பார் என்றும், அவர் அடமான கடனுக்கு வட்டி செலுத்த வேண்டிய அவசியமும் இருந்திருக்காது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் முன்னிலைக்கு ரூபாய் 10 லட்சம் கொடுத்த பிறகு பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அறிவிப்பு அனுப்பவில்லை. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் வழக்கு சொத்தில் நடந்து வரும் நூலகத்தை காலி செய்த பிறகு வழக்கு சொத்தை கிரயம் செய்து கொடுக்கிறேன் என்று வாசகங்கள் எதுவுமில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் எவ்வளவு நாட்களுக்குள் கிரயத்தை மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரை பத்தி 4ல் வழக்கு சொத்தில் நடைபெற்று வரும் நூலகத்தை காலி செய்து தருமாறு பிரதிவாதியை எப்பொழுது கேட்டேன் என்றால் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திய நாட்களில் இருந்து 2, 3 மாதங்களுக்குள் கேட்டேன்.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)